இந்த நகரத்திலே அரசு துறையைச் சேர்ந்த அனைத்து அலுவலகங்களும் இருக்கின்றன. மேலும் விக்கிரமசிங்கபுரத்திலே மதுரா கோட்ஸ் நிறுவனமும் நல்ல முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கேயும் கிட்டத்தட்ட 10 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேலாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே வீட்டு வசதி இல்லாமல் பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. மேலும் அதைவிட சின்ன தாலுக்காவிலே கூட வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு பெரிய நகரம். இந்த நகரத்திலே வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்த வீடுகள் இல்லாதது பெருங்குறையாக இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர், அவர்கள், இந்த நிதி ஆண்டிலே அம்பாசமுத்திரம் பகுதியிலே அடுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுத்து, அம்பாசமுத்திரம் நகரினுடைய வீட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் அம்பாசமுரத்திரம் விக்கிரசிங்கபுரத்தில் அடுக்குமாடி வீடுகள் கட்டுகின்ற திட்டம் எதுவும் தற்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் கிடையாது. இருப்பினும் இங்கு சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டு வசதி திட்டம் முதல் கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு தேவை நிர்ணயம் செய்யப்பட்டது. இதற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் நிலத்தைப் பெறுவதற்கு உரிய வகையிலே ஒத்துழைப்பு தந்து நிலத்ததைப் பெற்றுத் தருவார்களேயானால் தேவையான நிலம் கிடைக்கப் பெற்றவுடன் இங்கு சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டு வசதி திட்டத்தின் கீழ் வீட்டு வசதித் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் வினா எண் 12, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

12—

தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்தல்.

*9522—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சிறுதொழில் துறையினருக்கு உதவுகின்ற வகையில் நடத்தப்படும் தீப்பெட்டி தொழில் சேவை கூட்டுறவு சங்கங்கள் எத்தனை ?

(ஆ) அவை லாபத்தில் நடைபெறுகிறதா ?

(இ) நட்டத்தில் நடந்தால் அதை ஈடுகட்டும் வகையில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் 15 தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவு சேவை சங்கங்கள் உள்ளன.

(ஆ) 15 தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சேவை சங்கங்களில் 10 சங்கங்கள் மட்டுமே இலாபத்தில் செயல் படுகின்றன. 4 நட்டத்தில் இயங்குகிறது. ஒன்று புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) தீப்பெட்டி தொழிற் கூட்டுறவு சங்கம் உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரித்து இலாபகரமாக செயல்படும் நிலைக்கு கொண்டு வர கூடுதல் உறுப்பினர்களைச் சேர்க்கவும் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்னாலே 107 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்து, அந்தச் சங்கங்கள் எல்லாம் நலிவு அடைந்து இன்று 15 சங்கங்களாகக் குறைந்து இருக்கின்றன. அந்தச் சங்கங்கள் குறைவதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றிய புள்ளி விவரம் இப்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதுபற்றி விவரமாகச் சொல்லுகிறேன்.

திரு. டி. சுதர்சனம் : பேரவைத் தலைவர் அவர்களே தீப்பெட்டி தொழிற்சாலையைப் பொறுத்தவரை கூட்டுறவுச் சங்கங்களிலே சாதாரண ஏழை எளிய மக்கள் பயன்படுத்தி அதன் மூலமாக தொழிற்சங்கங்களை உருவாக்கி அதன் மூலமாக அவர்கள் லாபம் ஈட்டிக்கொண்டு இருந்

தார்கள். சிவகாசி, கோவில்பட்டியிலே மட்டும் சுமார் 5 இலட்சம் தொழிலாளர்கள் அதனாலே பயன்பெற்று வந்தார்கள். இன்றைக்கு வரிவிதிப்பு—சென்ட்ரல் எக்ஸைஸ் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே மெக்கனைஸ்டு இண்டஸ்ட்ரீஸ், செமி மெக்கனைஸ்டு இண்டஸ்ட்ரீஸோடு இந்த கைத்தொழில் செய்கின்ற சாதாரண தொழிலாளிகள் போட்டி போட முடியாத காரணத்தினாலே இன்றைக்கு அந்தத் தொழிற் சங்கங்கள் நலிவு அடைந்திருக்கின்றன. அதனால் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி செமி மெக்கனைஸ்டு தீப்பெட்டி தொழிற்சாலைக்கும், விம்கோ போன்ற பெரிய தொழிற் சாலைக்கும் இருப்பது போன்று இல்லாமல் சென்ட்ரல் எக்ஸைஸை இந்தச் சாதாரண குடிசைத் தொழிலுக்கு முழுவதுமாக விலக்கு அளிக்க மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தை இந்த அரசு உறுதியாக வலியுறுத்த முன்வரும். அதற்கு உறுப்பினர் அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன் :

திரு. ஜெ. பாலகங்காதரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் there is variation in central excise என்று சொன்னார்கள். ஆனால் வேரியேஷன் என்பது அங்கே இருக்கின்ற கையால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்குத் தான் உள்ளதே தவிர மெக்கனைஸ்டுக்கு ஏற்கனவே அதிக அளவில் வேரியேஷன் இருக்கிறது. அது விம்கோ என்ற நிறுவனத்திற்கு மட்டும் தான் வருகிறது. 'டி' கிளாஸ் மேச்சஸ் மற்றும் 'சி' கிளாஸ் மேச்சஸ் என்று கூறப்படுகின்ற அந்தத் தீப்பெட்டிகள் இரண்டுமே கையால் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. 'டி' கிளாஸ் மேச்சஸ்ஸிலே 20 பேர் என்றால் 'சி' கிளாஸ் மேச்சஸ்ஸிலே 40 பேர் என்ற அளவிலே உற்பத்தி நடந்துக்கொண்டிருந்த போதிலும் அங்கே வேரியேஷன் சென்ட்ரல் எக்ஸைஸிலே ஒரு ரூபாய் அதிகமாக இருப்பதால் அவையும் நட்டத்திலே இயங்குகிற சூழ்நிலை ஏற்படுகிறது. இதைச் சரி செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.